போன்றவற்றில் செய்கிறார்கள். மக்கள் வாழ்கிற நெருக்கமாக உள்ள சிறுசிறு தெருக்களில் சீர் கெட்டுப் போய் இருப்பதை கவனிப்பாரற்ற நிலையில் இருக்கிறது. மக்கள் வாழ்கிற பகுதியில் அம்மாதிரிப் பணிகள் செய்யப்பட வில்லை என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பிரிவு 3, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 1979ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/1979)" சட்டமாக நிறை வேற்றப் பெற வேண்டும் என மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.37 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

175. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு நகராட்சிப் பணி விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 17—7—1979 ஆம் தேதியிடப்பெற்ற அரசாணை எண் 1074-ல் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்) (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 ( ) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.